www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

FMM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## தமிழ்

9 - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - I (மதிப்பெண்கள் : 06)

1 X 6 = 6

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழ்விடு தூது ............... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. பின்வருவனவற்றுள் தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் சேராத மொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

3. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

4. மல்லல் மூதூர் வயவேந்தே - அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

பாடலைப் படித்து விடை தருக.

*"அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்*
*துன்னும் மேதி படியத் துதைந்தெழும்"*

5. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
அ) பெரிய புராணம் ஆ) தமிழ்விடுதூது இ) புறநானூறு ஈ) தமிழோவியம்

6. இவ்வடிகளில் உள்ள அன்னம் - துன்னும் எனும் சொற்களில் பயின்று வந்துள்ள நயம்
அ) இயைபு ஆ) எதுகை இ) மோனை ஈ) அந்தாதி

### பகுதி - II (மதிப்பெண்கள் : 12) பிரிவு - 1

குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்) 3 X 4 = 12

7. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) கல்லணையின் நீளம் 1080 அடியாகும்.
ஆ) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு.

8. நீங்கள் பேசும்மொழி எந்த இந்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது?

9. கூவல் என்று அழைக்கப்படுவது எது?

10. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே - குறிப்புத் தருக.

SIVANANDHA K M.A.,B.Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM Block
KRISHNAGIRI district

#### பிரிவு - 2

விடை தருக. (மூன்று மட்டும்)

11. *பொருத்தமான பெயரடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*
அ) எல்லோருக்கும் .......... வணக்கம். *(இனிய / கொடிய)*
ஆ) ................ ஓவியமாக வரைந்து வா. *(பெரிய / இனிய)*



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12. **அடைப்புக்குள் உள்ள சொல்லைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக.**
அ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ...... *(செல்).*
ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ......... *(கலந்துகொள்).*

13. **கலைச்சொற்களைத் தமிழில் தருக.**
அ) lexicon.   ஆ) water management

14. **பொருத்தமான துணை வினைகளைப் பயன்படுத்துக.**
அ) மனிதனையும் விலங்கையும் *(வேறு)*.... .. மொழியாகும்.
ஆ) காலந்தோறும் தன்னைப் *(புதுப்பித்து)* ....... மொழி தமிழ்.

## பகுதி- 3 (மதிப்பெண்கள் : 9)

**சுருக்கமான விடை தருக. (மூன்று மட்டும்)**
**வினா எண். 18 கட்டாய வினா.** 3 X 3 = 9

15. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை எழுதுக.

16. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

17. ***அடைப்புக்குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.***
அ) ஓவியம் குமரனால் வரையப்பட்டது. *(செய்வினைத் தொடராக)*
ஆ) அம்மா சோறு உண்டாள். *(பிறவினைத் தொடராக).*
இ) நீரின்றி அமையாது உலகு. *(வினாத் தொடராக).*

18. ***அடிபிறழாமல் எழுதுக.***
"காடெல்லாம் கழைக்கரும்பு" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

## பகுதி - 4 (மதிப்பெண்கள் : 15)

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** 3 X 5 = 15

19. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

20. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



21. **கடிதம் எழுதுக.**
உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

22. பள்ளியிலும் வீட்டிலும் உனக்குள்ள பொறுப்புகளைப் பட்டியலிடுக.

## பகுதி - 5 (மதிப்பெண்கள் : 08)

**விரிவான விடை தருக.** 1 X 8 = 8

23. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க. ***(அல்லது)***
'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com